

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மானியக் கோரிக்கை எண் : 37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை



## அறிவிப்புகள் 2022 - 2023


## V செந்தில்பாலாஜி

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

## 1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்.

தமிழ்நாட்டில், கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலுமாகக் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய மதுவிலக்குக் குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும் ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

## 2. மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

மது அருந்துதலுக்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் இணைந்து மேற்கொள்ள ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்ினை மேம்படுத்தி நவீனமயமாக்குதல்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்தினை மேம்படுத்தி நவீனமயமாக்கவும், மின் இணைப்பு வசதிகளை பொதுப்பணித்துறையின் மூலம் புதுப்பித்து மேம்படுத்துவதற்கும் ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. மதுவிலக்கு குற்றவாளிகளின் இரவு நேர சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு 20 சோதனைச் சாவடிகளில் மின்கலத்துடன் கூடிய சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளை பொருத்துதல்

மாநிலம் முழுவதும் மொத்தம் 45 மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 20 சோதனைச் சாவடிகள் அண்டை மாநிலங்களின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. அவ்வாறு அமைந்துள்ள 20 சோதனைச் சாவடிகளில், மதுவிலக்கு குற்றவாளிகளின் இரவு நேர சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு மின்கலத்துடன் கூடிய சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் கருவிகளை பொருத்த ரூ.0.13 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்படும்.



## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (டாஸ்மாக்) 6,715 மேற்பார்வையாளர்கள், 15,000 விற்பனையாளர்கள் மற்றும் 3,090 உதவி விற்பனையாளர்கள், ஆக மொத்தம் 24,805 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு மாத தொகுப்பூதியம் ரூ. 500/- ஏப்ரல், 2022 முதல் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.16.67 கோடி கூடுதல் செலவாகும்.

## 6. போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி போதைப் பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்க போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தமிழக போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர் நடத்தி வருகின்றனர்.

மாணவர்கள் மத்தியிலும், இளைஞர்கள் மத்தியிலும், போதைப் பொருளினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த இந்த நிதியாண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**V செந்தில்பாலாஜி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 1.